**கவனிக்க.**- *2017.01.06 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2002 - 2017 ජනවාරි මස 13 වැනි සිකුරාදා - 2017.01.13

*2002 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 38 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 47 |


**கவனிக்க.**- யூஎன்வீ மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2016, திசெம்பர் மாதம் 30 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி.வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2017, பெப்புருவரி மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, சனவரி மாதம் 20 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிகளில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகாண் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :.

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகாண் நிலையிலேயே இருக்கும். தகுதிகாண் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகாண் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகாண் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

*எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.*

(i) *முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;*

(ii) *ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;*

(iii) *ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;*

(iv) *சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;*

(v) *ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;*

(vi) *பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.*

*பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.*

*1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.*

*2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.*

*3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.*

*4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.*

*5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.*

*6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.*

*7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.*

*8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.*

*9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.*

*10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.*

*11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.*

*12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.*

*13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.*

*14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.*

*15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.*

*16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.*

*பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்*

(i) *ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.*

(ii) *ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.*

(iii) *நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.*

(iv) *சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.*

(v) *சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.*

(vi) *விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.*

(vii) *உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.*

(viii) *எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.*

(ix) *ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.*

(x) *வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.*

(xi) *உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.*

(xii) *மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.*

*பரீட்சை ஆணையாளர் நாயகம்.*

*இலங்கை பரீட்சைத் திணைக்களம்,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை.*

# பதவிகள் - வெற்றிடம்

## சட்டமா அதிபர் திணைக்களம்

### இணைந்த சேவைகள் அலுவலக உதவியாளர் சேவை தரம் III இற்கான ஆட்சேர்ப்பு விண்ணப்பங்கள் கோரல்

சட்டமா அதிபர் திணைக்களத்தின் அலுவலக உதவியாளர்கள் தரம் III இற்கான பதவி வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு செய்வதற்காக இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தின் பிரகாரம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைய திறமைகளின் அடிப்படையில், தகைமைகளைப் பூர்த்தி செய்யும் பரீட்சார்த்திகள் வெற்றிடங்களுக்காக நியமிக்கப்படுவர்.

3. சட்டமா அதிபர் திணைக்களத்தில் காணப்படும் வெற்றிடங்கள் 8 ஆம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. பதவியில் அமர்த்தப்படுவோர் எண்ணிக்கை மற்றும் பதவியில் அமர்த்தப்படும் திகதி என்பவை நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். குறிப்பிட்ட அளவு வெற்றிடங்கள் அல்லது எல்லா வெற்றிடங்களும் நிரப்பப்படுதல் அல்லது நிரப்பாமல் விடுவதற்கான அதிகாரம் நியமன அதிகாரிக்கு உள்ளது.

4. **சம்பளம்**.- இலக்கம் 03/2016 உடையதும் 2016.02.25 ஆந் திகதியுடையதுமான பொது நிர்வாக சுற்றறிக்கைகளின்படி அலுவலக உதவியாளர்கள் பதவியின் III, II மற்றும் I ஆம் தரங்களுக்குரியதான மாதாந்த சம்பள அளவுத்திட்டம்.- PL 1-2016 - ஏ ரூபா 24,250 - 10 X 250 - 10 X 270 - 10 X 300 - 12 X 330 ரூபா 36,410. ரூபா 27,020 இற்கு மேல் செல்ல வேண்டுமாயின் II ஆம் தரத்துக்கான பதவி உயர்வுக்கும், 29,750 ரூபாவுக்கு மேல் செல்ல வேண்டுமாயின் I ஆம் தரத்துக்கான பதவி உயர்வுக்கும், 32,780 இற்கு மேல் செல்ல வேண்டுமாயின் விசேட தரத்துக்கான பதவி உயர்வைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அச்சுற்றறிக்கையின் II ஆம் உப ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சம்பளம் வழங்கப்படும்.

5. இப்பதவி நிரந்தரமானது. இப்பதவிக்குரித்தான ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு உத்தியோகத்தர்கள் கட்டுப்படுதல் வேண்டும்.

6. முதலாவது நியமனம் பெற்ற இடத்தில் ஆகக்குறைந்தது 03 வருடங்கள் கட்டாயமாகப் பணியாற்ற வேண்டும். எவ்வாறெனினும் ஏதேனும் விசேட காரணங்களின் பேரில் எடுக்கப்படும் தீர்மானங்களின்போது இக்கட்டாய காலம் முடிவடைவதற்கு முன்பு ஏதேனும் உத்தியோகத்தர் ஒருவரை இடம் மாற்றுவதற்கான தேவை ஏற்படின் நியமன உத்தியோகத்தருக்கு அதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

7. **தகைமைகள்**.- அலுவலக உதவியாளர் சேவையின் III ஆம் தரத்துக்கான பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குப் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும் :-

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) விண்ணப்ப முடிவுத் திகதியன்று விண்ணப்பதாரி 18 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். தற்போது அரசாங்க சேவையில் கடமையாற்றிக் கொண்டிருக்கும் ஓய்வூதியம் பெறத் தகைமையுடைய விண்ணப்பதாரிகளுக்கு ஆகக்கூடிய வயதெல்லை ஏற்புடையதாகாது ;

(இ) விண்ணப்பதாரி சிறந்த குணவியல்புகளை உடையவராகவும் சுகதேகியாகவும் இருத்தல் வேண்டும் ;

(ஈ) *கல்வித் தகைமைகள்*.- க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத அமர்வில் தோற்றி இரு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் எல்லாமாக ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

(உ) அரச சேவை ஆணைக்குழு ஒழுங்கு விதிகளின் V ஆம் அத்தியாயத்தின்படி அரசாங்க சேவையில் நியமிக்கப்படுவதற்கு பொருத்தமற்றவராக இருத்தல் கூடாது.

எல்லா விண்ணப்பதாரிகளும் இப்பதவிக்குரித்தான தகைமைகளை விண்ணப்பத் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

8. **விண்ணப்பம் கோரல்**.- பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு காணப்படும் அலுவலக உதவியாளர்கள் சேவையில் பதவி வெற்றிடங்களைப் பூர்த்திசெய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| திணைக்களம் | பதவி | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|
| சட்டமா அதிபர் திணைக்களம் | அலுவலக உதவியாளர் சேவை III ஆம் தரம் | 16 |

9. **கட்டமைப்பு ரீதியான நேர்முகப் பரீட்சை.**- இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தின் பேரில் விண்ணப்பதாரர்களின் அடிப்படைத் தகைமைகளைப் பரீட்சிப்பதற்கான நேர்முகப் பரீட்சை நடைபெறும் திகதியன்று நடைபெறவுள்ள கட்டமைப்பு ரீதியான நேர்முகப் பரீட்சையில் விண்ணப்பதாரிகள் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் படிமுறை உறுதியாக பின்பற்றப்பட்டு தகைமைகளை நிறைவுசெய்த விண்ணப்பதாரிகள் அலுவலக உதவியாளர் பதவிகள் III ஆம் தரத்துக்குச் சேர்த்துக்கொள்ளப்படுவர். விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மொழியை விண்ணப்பத்தில் தெளிவாகக் குறிப்பிட வேண்டும் என்பதுடன் கட்டமைப்பு ரீதியான நேர்முகப் பரீட்சையும் அம்மொழியிலேயே நடாத்தப்படும்.

கட்டமைக்கப்பட்ட நேர்முகங்காணலுக்கான புள்ளி வழங்கும் நடைமுறை கீழ்வரும் அட்டவணைக்கு அமைவாக மேற்கொள்ளப்படும் :

| அவதானிப்புகள் | | புள்ளிகள் |
|---|---|---|
| பதவியில் பெற்றுக்கொண்ட அனுபவம்<br>(அதிகபட்சம் 5 வருடங்கள் கவனத்தில் கொள்ளப்படும்) | | 10 |
| தொடர்பாடல் திறன் | | 5 |
| கல்வித் தகைமைகள் | க. பொ. த. உயர் தரத்தில் சித்தியடைந்திருத்தல் | 5 |
| | க. பொ. த. (சா. த.) இல் கணிதம், ஆங்கிலம், இரண்டாம் மொழி மற்றும் ஏனைய அரச கரும மொழிகளில் திறமைச் சித்தி (அதிகபட்சம் 5 பாடங்கள் கவனத்தில் கொள்ளப்படும்.) | 10 |
| ஆளுமை | | 5 |
| இணைப் பாடவிதான செயற்பாடுகள் (விளையாட்டு/ சமூக சேவைகள் போன்றவை) | | 5 |
| நேர்முகங்காணலில் காட்டும் திறமைகள் | | 10 |
| மொத்தப் புள்ளிகள் | | 50 |

**குறிப்பு**.- பதவியுடன் தொடர்புடைய அனுபவம், கல்வித் தகைமைகள் மற்றும் இணைப் பாடவிதான செயற்பாடுகள் என்பவை சான்றிதழ்கள் மூலம் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும். மேற்கூறப்பட்ட தகைமைகள் விண்ணப்பம் கோரும் முடிவுத் திகதியன்று வலிதுடையதாக இருத்தல் வேண்டும்.

10. விண்ணப்பப்படிவம் நிரப்பப்படும்போது உண்மையான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். தகைமைகள் பரிசோதிக்கப்படும்போது ஏதேனுமொரு விண்ணப்பதாரி தகைமையற்றவர் எனத் தெரியுமிடத்து எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும். விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல் ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் போலியானது எனத் தெரியவரின் அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்படுவார்.

11.1 தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு ஏற்ப விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அதற்கு ஏற்ப அமையப்பெறாத அல்லது முறையாகப் பூர்த்திசெய்யப்படாத, குறைபாடுடைய விண்ணப்பப்படிவங்கள் முன் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும். முறையாக நிரப்பப்படாத விண்ணப்பப்படிவங்களால் ஏற்படுகின்ற இழப்புகளை விண்ணப்பதாரிகளே பொறுப்பேற்க வேண்டும் ;

11.2 இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2017, பெப்புருவரி 8 ஆந் திகதிக்கு முன்னர் "சட்டமா அதிபர், சட்டமா அதிபர் திணைக்களம், த. பெ. இலக்கம் 502, கொழும்பு 12" என்ற முகவரிக்கு கிடைக்கத்தக்கவாறு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கவும் ;

11.3 விண்ணப்பப்படிவம் பூர்த்திசெய்து அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'அலுவலக உதவியாளர் சேவையின் III ஆம் தரத்திற்கான ஆட்சேர்ப்பு' எனக் குறிப்பிடவும்.

12. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையுடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற உத்தேசத்தின்படி, குறித்த திகதியன்று அல்லது அத்திகதிக்கு முன் விண்ணப்பித்த சகல விண்ணப்பதாரிகளும் சட்டமா அதிபரினால் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஒன்றிற்கு அழைக்கப்படுவர். எனினும் இவ்வாறு அழைக்கப்படுவதானது

விண்ணப்பதாரி இப்பதவிக்கான தகைமையுடைவர் என ஏற்றுக்கொண்டதாக அமையாது. விண்ணப்பதாரி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு அவர் இவ் அறிவித்தல்களுக்கு அமைவான தகுதியுடைவரா எனப் பரீட்சிக்கப்படும் சந்தர்ப்பத்தில் கோரப்பட்ட தகைமையுடையவர் அல்ல எனத் தெரியவரின் அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

13. விண்ணப்பதாரியின் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குப் பின்வரும் ஆவணங்களில் ஒன்றையேனும் நேர்முகப் பரீட்சைக் குழுவிடம் சமர்ப்பித்தல் வேண்டும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியான ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

14. இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின், அது தொடர்பில் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானம் மேற்கொள்ளப்படும். சகல விண்ணப்பதாரிகளும் இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பொது விதிகளுக்கு அமைய செயலாற்றுவதற்கு கட்டுப்பட்டவர்கள் ஆவார்கள்.

ஜயந்த ஜயசூரிய,
சட்டமா அதிபர்.

சட்டமா அதிபர் திணைக்களம்,
2016, திசெம்பர் 26.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அலுவலக உதவியாளர் சேவை தரம் III இற்கான ஆட்சேர்ப்பு**

(அலுவலகப் பாவனைக்கு மட்டும்)

மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

நீங்கள் சேவை செய்ய விரும்பும் அமைச்சு :----.
திணைக்களம் :----.
பிரதேச அலுவலகம் :----.

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
2. முழுப்பெயர் :----.
3. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.
4. நிரந்தர முகவரி :----.
5. பால் :
பெண்-1, ஆண்-0
6. பிறந்த திகதி :
வருடம் : மாதம் : திகதி :
7. தொலைபேசி இலக்கம் :
8. கல்வித் தகைமைகள் :
க. பொ. த. (சா. த.) பரீட்சை :
(i) முதல் அமர்வில் பெறுபேறுகள் -
பரீட்சையின் வருடமும் மாதமும் :----.
சுட்டிலக்கம் :----.

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

(ii) இரண்டாம் அமர்வில் பெறுபேறுகள்-
வருடமும் மாதமும் :----.
சுட்டிலக்கம் :----.

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

8.1 க. பொ. த. (உ. த.) பரீட்சை முழு விபரங்கள் :

(i) பரீட்சை வருடம் மற்றும் மாதம் :----.
(ii) சுட்டிலக்கம் :----.
(iii) பெறுபேறுகள் :

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

9. ஏனைய தகைமைகள் :----.

10. பதவி தொடர்பிலான அனுபவம் :----.

11. விளையாட்டும் கல்வித் தகைமைகளும் :----.

12. நீங்கள் ஏதேனும் ஒரு நீதிமன்றில் எவையேனும் குற்றச்சாட்டிற்கு குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளீரா ? :----.
(பொருத்தமான கூட்டில் ' ✓ ' அடையாளம் இடுங்கள்). ஆம் எனில் விபரங்களைக் குறிப்பிடவும் :----.

ஆம் ☐ இல்லை ☐

13. விண்ணப்பதாரரின் உறுதியுரை :

(அ) இந்த விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் என் அறிவுக்கு எட்டியவரையில் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் நான் இத்தால் உறுதிமொழிகின்றேன். என்னால் முழுமையாக சில பகுதிகள் பூரணப்படுத்தப்படாமல் அத்துடன்/அல்லது பிழையாகப் பூரணப்படுத்தப்பட்டு அவற்றினால் எழும் நட்டங்களை முழுமையாக ஏற்றுக்கொள்ள இத்தால் உறுதி அளிக்கின்றேன். மேலும் இதில் காணப்படும் அனைத்துப் பகுதிகளையும் நான் முழுமையாகப் பூரணப்படுத்தியுள்ளேன் என உரைக்கின்றேன்.

(ஆ) மேலே கொடுக்கப்பட்ட விபரங்கள் பிழையென நிரூபிக்கப்படுமிடத்து அது எனது தெரிவுக்கு முன் கண்டுபிடிக்கப்பட்டால் தகைமை நீக்கம் செய்யப்படுவேன் என்பதையும் தெரிவுக்குப் பின் கண்டுபிடிக்கப்பட்டால் பதவி நீக்கம் செய்யப்படுவேன் என்பதையும் நன்கு அறிவேன்.

(இ) இதனகத்துக் காணப்படும் தகவல்களைப் பின்னர் மாற்றங்கள் எதுவும் செய்ய மாட்டேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

1-259

## இலங்கை நிரந்தரக் கடற்படை

### பயிலிளவல் உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள்

இலங்கை நிரந்தரக் கடற்படையின் பயிலிளவல் உத்தியோகத்தர் களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

2. பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள ஆண் பரீட்சார்த்திகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :

(அ) சேர். ஜோன் கொத்தலாவெல பாதுகாப்புப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டப்படிப்புகளைத் தொடர்வதற்குப் பின்வரும் பிரிவுகளில் ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்றது :-

(அ) நிறைவேற்றுப் பிரிவு ;
(ஆ) தலைமைப் பிரிவு ;
(இ) விநியோகப் பிரிவு ;
(ஈ) பாதுகாப்புப் பிரிவு ;

தமக்குரிய பிரிவிற்கு விண்ணப்பிக்கத் தகைமையுடையவராக இருப்பதற்கு, விண்ணப்பதாரி க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு கணிதம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தி உட்பட ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருப்பதுடன் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் கீழே கொடுக்கப்பட்டுள்ள பிரிவுகளில் குறிப்பிட்டுள்ள 3 பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும். விண்ணப்பதாரி பொது சாதாரணப் பரீட்சையில் 30 புள்ளிகளைப் பெற்றிருக்க வேண்டும் என்பதுடன் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் பல்கலைக்கழக அனுமதியைப் பெறுவதற்கான குறைந்தபட்ச நுழைவுத் தகைமையைப் பெற்றிருக்க வேண்டும் (பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட பரீட்சைப் பெறுபேறுகளின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி இணைக்கப்பட வேண்டும்).

(1) நிறைவேற்றுப் பிரிவு - பௌதிகவியல் அல்லது உயிரியல்.
(2) தலைமை/ பாதுகாப்புப் பிரிவு - விஞ்ஞானம், வர்த்தகம், தொழில்நுட்பம் அல்லது கலை.
(3) விநியோகப் பிரிவு - வர்த்தகம்.

(ஆ) கடல்சார் பொறியியல் பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம் (உள்ளூர்/ வெளிநாடு) தமக்குரிய பிரிவிற்கு விண்ணப்பிக்கத் தகைமையுடைவராக இருப்பதற்கு விண்ணப்பதாரி க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு கணிதம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தி உட்பட ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருப்பதுடன் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் இணைந்த கணிதம், பௌதீகவியல் மற்றும் இரசாயனவியல் ஆகிய பாடங்களில் சிதத்தியடைந்திருத்தல் வேண்டும். விண்ணப்பதாரி பொது சாதாரண பரீட்சையில் 30 புள்ளிகளைப் பெற்றிருக்க வேண்டும் என்பதுடன் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் பல்கலைக்கழக அனுமதியைப் பெறுவதற்கான குறைந்தபட்ச நுழைவுத் தகைமையைப் பெற்றிருக்க வேண்டும் (பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட பரீட்சைப் பெறுபேறுகளின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி இணைக்கப்பட வேண்டும்).

3. ஏனைய தேவைப்பாடுகள் :

(அ) தேசிய இனம்.- இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) வயது.- 2017.02.22 ஆந் திகதியன்று 18 வயதிற்குக் குறையாமலும் 22 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(இ) உயரம்.- 168 செ. மீ. அல்லது அதற்கு மேல் (171 செ. மீ. மற்றும் அதற்கு மேல் தலைமைப் பிரிவிற்கு).

(ஈ) நிறை.- 52 கி. கி. அல்லது அதற்கு மேல்.

(உ) மார்பு.- 81 செ. மீ. (குறைந்தபட்சம்).

(ஊ) நிறப் பார்வை.- STD II.

(எ) கட்புலக் கூர்மை.- இடதுகண் 6/6 மற்றும் வலது கண் 6/ 6 (மூக்குக்கண்ணாடி மற்றும் லென்ஸ் இன்றி).

(ஏ) குடியியல் நிலை.- பரீட்சார்த்திகள் திருமணமாகாத வர்களாக இருத்தல் வேண்டும். பயிலிளவல் அதிகாரி பயிற்சியின்போதும், நியமனத் திகதியிலிருந்து மேலும் ஒரு வருட காலப்பகுதிக்கும் திருமணம் செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

4. விளையாட்டுத் துறையில் மிகச் சிறந்த சாதனைகளுக்கு உரிய கவனம் செலுத்தப்படும்.

5. 2 ஆம் மற்றும் 3 ஆம் பந்திகளின் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்யாத பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். முதலாவது நேர்முகத் தேர்விற்கு வரும்போது உயரம், பார்வை மற்றும் நிறை ஆகியன அளவிடப்படும். வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தர நியமத்திற்குக் குறைவான உயரம், பார்வை மற்றும் நிறை என்பவற்றைக் கொண்ட பரீட்சார்த்திகளும், விதிவிலக்கான திறன்களைக் கொண்டிராத பரீட்சார்த்திகளும் நேர்முகத் தேர்விற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள். விசேட திறமையினைக் கொண்டிருக்கக்கூடிய அல்லது சேவைக்கான தகுதியினைக் கொண்டிருக்கக்கூடிய எவரேனும் ஒரு பரீட்சார்த்தி, வழங்கப்பட்ட போதிய உயரத்தினைக் கொண்டிராவிடினும் போதிய கல்விசார் மற்றும் தொழில்சார் தகைமைகளைக் கொண்டிருப்பாராயின் அவர் இலங்கைக் கடற்படைத் தளபதியின் தற்றுணிவின் பேரில் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படலாம்.

6. சேவை நிபந்தனைகள் :

(அ) விண்ணப்பதாரி ஏனைய பதவிநிலைகளைப் போன்று நிரந்தர கடற்படைச் சேவைக்காக பயிலிளவல் உத்தியோகத்தராகச் சேர்க்கப்படுவதோடு அடிப்படைப் பயிற்சி நெறிகளுக்கும் உட்படுத்தப்படுவார். பயிலிளவல்கள் தாம் பெற்றிருக்கும் பிரிவுகளுக்கு அமைவான காலப்பகுதியில் பயிற்சிகள் வெற்றிகரமாக முடிவுற்றதும் ஏனைய பதவிநிலைக்காக ஆரம்பத்தில்

சேர்த்துக்கொள்ளப்படும்போது இருந்த பதவிநிலை மாற்றப்பட்டு பதில் துணைப் படைத் தலைவர் பதவிநிலைக்கான நிரந்தர ஆணையைப் பெறுவார்.

(ஆ) பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனையுடன் கடற்படைத் தளபதியினால் தீர்மானிக்கப்படுகின்ற இலங்கை அல்லது வெளிநாட்டில் உள்ள இடமொன்றில் பயிற்சியினைத் தொடர்வதற்குப் பயிலிளவல்கள் தேவைப்படுத்தப்படுவார்கள்.

(இ) பயிற்சிக் காலப்பகுதியிலும், அதன் பின்னரும் பயிலிளவல்கள் கடற்படைச் சட்டத்திற்குட்பட்டவர்கள் ஆவர்.

(ஈ) பயிலிளவல்கள் ஒவ்வொருவருக்கும் சீருடைகள், உபகரணங்கள் மற்றும் மருத்துவ சதிகள் அனைத்தும் வழங்கப்படும்.

(உ) பயிற்சிக் காலத்தின்போது பயிலிளவல்களுக்கு உணவும், தங்குமிட வசதியும் விடுதியிலிருந்து உணவும் கடற்படையினால் வழங்கப்படும்.

(ஊ) ஆணையினைப் பெறுவதற்கான பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் காலப்பகுதியில் எவரேனும் பயிலிளவல் தனது சுய விருப்பத்திற்கமைய விலகிக்கொள்ளுமிடத்து பயிற்சிக் காலத்தின்போது ஏற்பட்ட அனைத்துச் செலவினங்களையும் பயிலிளவல் இலங்கை கடற்படைக்கு மீளச்செலுத்த வேண்டும்.

(எ) பயிலிளவல் ஒருவர் தனது பயிற்சிக் காலத்தின் எந்தவொரு நேரத்திலும் துர்நடத்தை காரணமாக அல்லது தனது கட்டுப்பாட்டிற்குட்பட்ட விடயம் தொடர்பாக ஆணைக்குழுவிற்கு பொறுப்புக் கூற வேண்டியதன் காரணமாக பொருத்தமற்றவர் என அதிகாரிகளினால் அறிக்கை செய்யப்படுமிடத்து பயிற்சிக் காலத்தின்போது ஏற்பட்ட அனைத்துச் செலவினங்களையும் இலங்கைக் கடற்படைக்கு மீளச்செலுத்த நேரிடுவதுடன், இது பயனளிக்கும் வகையில் இலங்கை அரசாங்கத்தின் சார்பாக செயற்படும் கடற்படைத் தளபதியுடன் முறி ஒன்றினை மேற்கொள்ளவும் நேரிடும்.

(ஏ) 2 ஆம் மற்றும் 3 ஆம் பந்திகளின் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்த பரீட்சார்த்திகள் மருத்துவப் பரிசோதனை, உடல் உறுதித் தேர்வு மற்றும் உத்தியோகத்தர் தரப் பரீட்சை ஆகியவற்றுக்காக அழைக்கப்படுவர். இப்பரீட்சைகளைத் திருப்திகரமாகப் பூர்த்தி செய்த பரீட்சார்த்திகள் முதற்கட்ட நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவதுடன், முற்கட்ட நேர்முகத் தேர்வில் சித்தி அடைந்தோர் இறுதி நேர்முகத் தேர்வுக்காகவும் அழைக்கப்படுவர். ஒவ்வொரு பிரிவுக்கும் தேவைப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் நேர்முகத் தேர்வு மற்றும் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்படுவார்கள்.

(ஐ) திருமணமான பயிலிளவல்களுக்கு விடுதி வசதி இருப்பின், வழங்கப்படும். அரச பணியாளர்களுக்கு ஏற்புடையதைப் போன்றதான வாடகை விதிக்கப்படும்.

(ஒ) அனைத்து அலுவலர்களும் கடற்படைச் சட்டத்தினால் நிர்வகிக்கப்படுவர்.

7. **அரசகரும மொழித் தேவைப்பாடுகள்**.- தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்திகள் இலங்கைக் குடியரசின் மொழிக் கொள்கைக்குப் பயனளிக்கும் வகையிலும், குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளின் அமுலாக்கத்திற்காகவும், ஏற்கனவே உருவாக்கப்பட்ட அல்லது இதன் பின்னர் உருவாக்கப்படக்கூடிய ஏதேனும் விதிகளுக்கு இணங்கி ஒழுகுதல் வேண்டும்.

8. **கொடுப்பனவுகள் மற்றும் படிகள்**.- 03/ 2016 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவை சுற்றறிக்கைக்கு அமைவாக 2016.01.01 ஆந் திகதியிலிருந்து பயனளிக்கும் வகையில் சம்பளம் செலுத்தப்படும்.

(அ) ஆரம்பச் சம்பளம்.- 32,380 ரூபா

(ஆ) வாழ்க்கைச் செலவு.- 7,800 ரூபா

(இ) சீருடை சுத்தப்படுத்தலுக்கான படிகள்.- 225 ரூபா

(ஈ) கஷ்டப் பிரதேசங்களுக்கான படிகள் (செயற்பாட்டுப் பகுதிகள்) - அடிப்படைப் பயிற்சியின் பின்னர்

(உ) கஷ்டப் பிரதேசங்களுக்கான படிகள் (செயற்பாடற்ற பகுதிகள்) - அடிப்படைப் பயிற்சியின் பின்னர்

(ஊ) ஏனைய படிகள் : விசேட படி 1,000 ரூபா ;
விசேட மேலதிகப் படி 3,000 ரூபா

**குறிப்பு**.- 2020.01.01 ஆந் திகதியிலிருந்து பயனளிக்கும் வகையில் பயிலிளவல் ஒருவரின் ஆரம்பச் சம்பளம் 32,380 ரூபா என்பதுடன் 2016.01.01 ஆந் திகியிலிருந்து பயனளிக்கும் வகையில் பின்வருமாறு திருத்தியமைக்கப்படும்.

01.01.2016 - 18,984 ரூபா - செம்மையாக்கற் படி 9,778 ரூபா

01.01.2017 - 22,333 ரூபா - செம்மையாக்கற் படி

01.01.2018 - 25,682 ரூபா - செம்மையாக்கற் படி 3,080 ரூபா

01.01.2019 - 29,031 ரூபா - .............

01.01.2020 - 32,380 ரூபா - .............

(எ) ஏற்புடையவிடத்து தகைமைப்படி வழங்கப்படும் (மாதாந்தம் அதிகபட்சம் ரூபா 637.50 வரை)

(ஏ) வருடம் ஒன்றிற்கு விடுமுறை புகையிரத ஆணைச்சீட்டு 3 சோடிகள் (அலுவலர், வாழ்க்கைத் துணை, பிள்ளைகள் மற்றும் தங்கி வாழ்வோருக்கும் ஏற்புடையன).

(ஐ) மாதம் ஒரு முறை அலுவலர்களின் ஓய்விடத்திலிருந்து சொந்த இடங்களுக்குப் பிரயாணம் செய்ய அலுவலர்களுக்கு புகையிரத ஆணைச்சீட்டுகளுக்கு மேலதிகமாக

ஒரு சோடி ஆணைச்சீட்டு அல்லது பேருந்து செலவினை மீளச் செலுத்துதல்.

(ஒ) சீருடை மற்றும் துணைப் பொருட்களின் இலவச விநியோகம்.

(ஓ) இலவச மருத்துவ வசதிகள் (அலுவலர், வாழ்க்கைத் துணை, பிள்ளைகள் மற்றும் தங்கி வாழ்வோருக்கு ஏற்புடையன).

(ஔ) அரசாங்க விடுதி ஒன்றில் வசிக்காத திருமணமான அலுவலர்களுக்கு மாதாந்தம் 1,600 ரூபாவிலிருந்து 4,250 ரூபா வரையான வாடகைப் படிகள்.

9. **விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள்** :

(அ) விண்ணப்பங்கள் இவ் அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவ அமைப்பில் இருத்தல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பதாரியினால் தெளிவான கையெழுத்தில் நிரப்பப்பட வேண்டும். உரிய முறையில் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் சிரேஷ்ட பதவிநிலை உத்தியோகத்தர் (ஆட்சேர்ப்பு), த. பெ. இல. 593, கடற்படைத் தலைமையகம், கொழும்பு 1 எனும் முகவரிக்கு 2017.02.22 ஆந் திகதியன்று 12 மணித்தியாலங்களில் அல்லது அதற்கு முன்னராக கிடைக்குமாறு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்க வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பயிலிளவல் உத்தியோகத்தர்களுக்கான ஆட்சேர்ப்பு" எனக் குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதி மற்றும் நேரத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும், வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளைப் பின்பற்றத் தவறிய விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. மேலதிக தகவலை www.navy.lk அல்லது 0112215154 என்ற இலக்கத் தொலைபேசி ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

(ஆ) அரச சேவை/ கூட்டுத்தாபனங்கள்/ சபைகள்/ சிவில் தாபனங்களிலுள்ள பரீட்சார்த்திகள் தங்களது விண்ணப்பங்களை அவர்களது திணைக்கள/ கூட்டுத்தாபன/ சபை/ சிவில் தாபன தலைவரூடாக அனுப்பி வைக்க வேண்டும் என்பதுடன் தெரிவு செய்யப்படுமிடத்து பரீட்சார்த்தியை விடுவிப்பதற்கான சான்றிதழையும் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

(இ) நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுகையில் அல்லது அழைக்கப்படும்போது பரீட்சார்த்திகள் பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதிகளைச் சமர்ப்பிப்பதற்குத் தேவைப்படுத்தப்படுவார்கள் :-

(1) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் ;

(2) பிரிவுக்கு அவசியமான கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் ;

(3) பாடசாலை விடுகைப்பத்திரம் ;

(4) கிராம அலுவலரின் சான்றிதழ் (விண்ணப்ப இறுதித் திகதியிலிருந்து 6 மாத காலத்தினுள் எடுக்கப்பட்டது) ;

(5) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட வர்த்தக/ தொழில்நுட்பப் பயிற்சி மற்றும்/ அல்லது அனுபவம் குறித்த சான்றிதழ்கள் (இருப்பின்) ;

(6) அண்மைக் காலத்தில் பெறப்பட்ட இரு நற்சான்றிதழ்கள், இறுதியாக சமுகமளித்த பாடசாலை அதிபரிடமிருந்து பெற்றுக்கொண்ட சான்றிதழ் ஒன்றும், இரண்டு வருடத்திற்கு மேல் விண்ணப்பதாரியை நன்கு அறிந்த பொறுப்புவாய்ந்த நபர் ஒருவரிடமிருந்து அல்லது தற்போதைய தொழில் தருநரிடமிருந்து (தொழில் புரிவாராயின்) பெற்றுக்கொண்ட சான்றிதழ் ஒன்றும் ;

(7) விளையாட்டுச் செயற்பாடுகள், படைப் பயிற்சி மற்றும் ஏனைய சான்றிதழ்கள்.

(ஈ) மேற்குறிப்பிட்ட ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறுகின்ற விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் கவனத்திற்கொள்ளப்படமாட்டாது.

(உ) வேறு எந்த ஆவணங்களையோ அல்லது ஆவணங்களின் மூலப் பிரதிகளையோ விண்ணப் பப்படிவத்துடன் இணைத்தல் கூடாது.

(ஊ) சான்றிதழ்களின் மூலப்பிரதிகள் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப்பட்டு அவற்றில் ஏதேனும் தொலைந்தால் அதற்கு இலங்கை கடற்படை பொறுப்பேற்காது.

10. விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட கூற்றுக்களில் ஏதேனும் பிழையாகக் குறிப்பிடப்பட்டு அத்தகைய பிழை தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின் தகுதியிழப்புக்கும், தெரிவின் பின்னர் கண்டுபிடிக்கப்படின் பதவி நீக்கத்துக்கும் விண்ணப்பதாரியை உள்ளாக்கும்.

11. **நேர்முகப் பரீட்சைத் தெரிவுகள் மற்றும் ஏனையவை** :

(அ) மேலே குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்த பரீட்சார்த்திகள் மத்தியில் ஆரம்ப தெரிவு இடம்பெறும். தெரிவுசெய்யப்பட்ட பரீட்சார்த்திகள் கடற்படைக் கட்டளைத் தளபதியினால் குறிப்பிடக் கூடிய பரீட்சைகளுக்கு முகங்கொடுக்கத் தேவைப் படுத்தப்படுவார்கள். பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்பட்ட தெரிவுச் சபையினால் தெரிவுசெய்யப் பட்ட பரீட்சார்த்திகளின் நேர்முகத் தெரிவின் பின்னர் இறுதித் தெரிவு இடம்பெறும்.

(ஆ) உடல் உறுதித் தேர்வைப் பூர்த்திசெய்வதற்கான தேவைப்பாடுகள் :

| *உடற்பயிற்சி* | *சுற்றுக்கள்* | *நேரம் (நிமிடங்கள்/ செக்கன்கள்)* |
|---|---|---|
| 1,600 மீ. ஓட்டம் | | 6-8 நிமிடங்கள் |
| தள்ளுதல் (Push up) | 25 அல்லது அதற்கு மேல் | 2 நிமிடங்கள் |
| இருத்தல் (Sit up) | 25 அல்லது அதற்கு மேல் | 2 நிமிடங்கள் |
| கை வளைத்தல் (Arm Bending) | 5 அல்லது அதற்கு மேல் | - |
| Standing Board Jump | | - |
| Rope Climbing | 242 செ. மீ. அல்லது அதற்கு மேல் | - |
| Shuttle Run | - | 11 செக்கன்கள் |

(ஆ) நேர்முகத் தெரிவு நடாத்தப்படும் இடம், நேரம் மற்றும் திகதி பற்றி நேர்முகத் தெரிவுக்கு தெரிவுசெய்யப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்படும். இதற்கான பிரயாணச் செலவு மற்றும் ஏனைய செலவுகள் செலுத்தப்படமாட்டாது.

(இ) விண்ணப்பதாரி ஒருவர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்தின்போதும் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டையினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஈ) இறுதி நேர்முகப் பரீட்சைகளுக்குத் தகுதியான பரீட்சார்த்திகள் இலங்கைக் கடற்படை மருத்துவச் சபை ஒன்றின் முன்னால் தோற்றுவதற்கு தேவைப் படுத்தப்படுவார்கள்.

(உ) பரீட்சார்த்தி ஒருவரைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவரேனும் ஒருவர் நற்சான்றிதழ் ஒன்றை வழங்குவதன் மூலமே சிபாரிசு செய்ய வேண்டும். பரீட்சார்த்தியைத் தெரிவுசெய்வதில் துணை நிற்கும் அல்லது செல்வாக்குச் செலுத்த முயற்சி எதுவும் அப்பரீட்சார்த்தியைத் தகுதியற்றவராக்கும்.

(ஊ) ஆட்சேர்ப்புக்குப் பொருத்தமற்றவராகக் காணப்படுகின்ற பரீட்சார்த்திகள் தொடர்பில் அறிவித்தல் வழங்கப்படாது.

**குறிப்பு**.- இந்த வர்த்தமானி அறிவித்தலானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிடப் பட்டுள்ளது. இவ்வர்த்தமானி அறிவித்தல் தொடர்பாக சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்பட்டால் சிங்கள மொழி உரையே மேலோங்கி நிற்கும்.

ஆர்சி விஜேகுணரத்ன,
WV, RWP & Bar, RSP, VSV, USP, ndc, psn,
வைஸ் அட்மிரால்,
கடற்படைத் தளபதி.

கடற்படைத் தலைமையகம்,
த. பெ. இல. 593,
கொழும்பு 1.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை கடற்படையில் பயிலிளவல் உத்தியோகத்தர்கள் பதவி**

1. தேசிய இனம் :----.

   (பரம்பரை மூலம் அல்லது பதிவின் மூலம் இலங்கைப் பிரசையா என்பதைக் குறிப்பிடுவதோடு பதிவுமூலம் பிரசையாயின் சான்றிதழின் இலக்கத்தையும் திகதியையும் குறிப்பிடவும்).

2. விண்ணப்பிக்கும் பிரிவு (முன்னுரிமை அடிப்படையில்) :----.
3. முழுப்பெயர் :----.

   (தேசிய ஆள் அடையாள அட்டையில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு)

4. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.
5. நிரந்தர முகவரி :----.
6. தபால் முகவரி :----.
7. பிறந்த திகதி :----.
8. வயது :

   வருடங்கள் ---- மாதங்கள் ---- நாட்கள் ----.

   (2017 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதியிலிருந்து)

9. உயரம் : ---- (செ. மீ.)

   மார்பு : ---- (செ. மீ.)

   நிறை : ---- (கி. கி.)

10. நிரந்தர முகவரிக்கு அண்மைய பொலிஸ் நிலையம் :----.
11. மாவட்டம் :----.
12. தேர்தல் தொகுதி :----.
13. கிராம அலுவலர் பிரிவு :----.
14. தொலைபேசி இலக்கம் :----.
15. திருமணமானவரா ? :----.

16. பால் :----.

17. சமுகமளித்த பாடசாலைகள் :----.

18. சமுகமளித்த பாடசாலை மற்றும் பல்கலைக்கழகம் பற்றிய விபரங்கள் :

| பாடசாலையின்/ பல்கலைக்கழகத்தின் பெயர் | பரீட்சையின் வகை | பரீட்சை ஆண்டு | சித்தி அடைந்த பாடம் (தரம் உள்ளடங்கலாக) |
|---|---|---|---|
| | க. பொ. த. (சா. த.) :<br>க. பொ. த. (உ. த.) :<br>வேறு : | | |

19. பாடசாலை/ பல்கலைக்கழகத்திலிருந்து விலகிய பின்னரான தொழில் பற்றிய விபரங்கள் (ஏற்புடையதாயின்) :

| தொழில் தருநரின் பெயர் மற்றும் முகவரி | தொழிலின் தன்மை | சேவைக்காலம் | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| | | | |

20. பெற்றோர் பற்றிய விபரங்கள் :

| முழுப் பெயர் | பிறந்த இடம் | தொழில் | தற்போதைய முகவரி |
|---|---|---|---|
| தந்தை<br>தாய் | | | |

21. இப்பதவிக்கான ஏதேனும் விசேட தகைமை :----.

22. விளையாட்டுக்களில் தற்போதைய சாதனைகள் பற்றிய விபரங்கள் :

(பங்குபற்றிய போட்டிகளின் திகதி/ வருடம் மற்றும் ஏனையவை ஆகியவற்றுடன் பெற்றுக்கொண்ட தரங்கள்/ மட்டங்கள் தொடர்பான விபரங்கள்) :----.

23. பாடசாலையில்/பல்கலைக்கழகத்தில் அல்லது வெளி நிறுவனங்களில் பெற்றுக்கொண்ட ஏனைய சாதனைக் குறிப்புகள் (திகதிகள்/வருடங்களுடன் விபரங்களைக் குறிப்பிடவும்.) : ----.

24. ஆயுதப்படை அல்லது தொண்டர் படையில், பயிலிளவல் பயிற்சிப் படையில் அல்லது இளைஞர் சாரணர் அமைப்பு ஆகியவற்றில் முன்னர் வகித்த ஏதேனும் சேவை :----.

25. இலங்கைக் கடற்படை அல்லது ஏதேனும் ஆயுதப்படை அல்லது பொலிஸ் ஆகியவற்றில் இணைந்து கொள்வதற்காக ஏற்கனவே விண்ணப்பித்துள்ளீரா ? அவ்வாறாயின் அது தொடர்பான விபரங்களையும் முடிவுகளையும் குறிப்பிடவும் :----.

26. சிவில் அல்லது இராணுவ நீதிமன்றமொன்றில் தண்டிக்கப்பட்டுள்ளீரா ? அல்லது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளீரா ? அவ்வாறாயின் அது தொடர்பான விபரங்களைக் குறிப்பிடுக :----.

27. அரசாங்கத் திணைக்களமொன்றில் அல்லது அரச துறை/ சபை/ கூட்டுத்தாபனம் (அரசாங்கத்தினால் கட்டுப்படுத்தப்படுகின்ற மத்திய வங்கி, தேசிய வங்கி, பல்கலைக்கழகங்கள், அரசினால் கட்டுப்படுத்தப்படும் கூட்டுக் களஞ்சியக் கம்பனிகள் மற்றும் வேறு) ஆகியவற்றில் ஏற்கனவே சேவையில் ஈடுபட்டிருப்பின் அத்தொழிலை முடிவுறுத்தியமைக்கான காரணங்கள்) :----.

27. நடத்தைச் சான்றிதழ்கள் பற்றிய விபரங்கள் :

| பெயர் | பதவி | தபால் முகவரி |
|---|---|---|
| | | |

28. விண்ணப்பதாரியினால் கையொப்பமிடப்பட வேண்டிய உறுதிமொழி :

மேற்படி வினாக்களுக்குக் கொடுக்கப்பட்ட பதில்கள் என் அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் உண்மையானவையும் சரியானவையும் எனவும் உறுதிப்படுத்துகின்றேன். அத்துடன் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கைவினைஞர்கள் (Artificers) பிரிவுக்கு தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்திகள் தொடர்பாக பிரயோகிக்கப்படும் விதிகளையும் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறைகளையும் வாசித்து புரிந்து கொண்டேன் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

1-317

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**கல்வி அமைச்சு**

ஆசிரியர் கல்லூரிகளில் ஆசிரியர் கல்விப் பாடநெறியினைத் தொடர்வதற்காக
ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்தல் - 2017/ 2018

கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை இலக்கம் 28/ 2016 இற்கமைய தகைமைகளைப் பூர்த்திசெய்யும் பட்டதாரி அல்லாத பயிற்றப்படாத ஆசிரியர்களுக்கு ஆசிரியர் கல்லூரிகளில் ஆசிரியர் கல்விப் பாடநெறியினைத் தொடர்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஏற்கனவே விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படாதுள்ள ஆசிரியர் சேவை/ ஆசிரியர் உதவியாளர்கள், இச்சுற்றறிக்கை இலக்கம் 28/ 2016 இற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2017, சனவரி 31 ஆந் திகதிக்கு முன்னர் "கல்விப் பணிப்பாளர், ஆசிரியர் கல்வி நிருவாகக் கிளை, கல்வி அமைச்சு, இருசுபாய, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும்.

இச்சுற்றறிக்கை விண்ணப்பப்படிவம் மற்றும் ஆலோசனைப் படிவத்தைக் கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளம் மூலமும் (www.moe.gov.lk) எந்தவொரு வலயக் கல்வி அலுவலகத்தின் மூலமும் பெற்றுக்கொள்ள முடியும்.

சுனில் ஹெட்டிஆரச்சி,
செயலாளர்.

கல்வி அமைச்சு,
'இசுருபாய', பத்தரமுல்லை,
2017, சனவரி 06.

1-316